-லிருந்ததில்லை. இவ்வளவு ஐசுவரிய மான மனிதன் எழுதின இந்த பிரசங்கி புஸ்தகத்தில் "மாயை மாயை எல்லாம் மாயை" என்று சொல்லுகிறார். பிரசங்கி 12-ஆம் அதிகாரத்தில் வயோதிபத்தின் அவலமான நிலையை பாடல் நடைமுறையில் அழகாக எழுதி, அப்படிப்பட்ட நிலைமை வருவதற்கு முன்பு வாலிபத்திலே சிருஷ்டிகரை நினைக்கவேண்டும் என்று ஆலோசனை கூறுகிறார்.

சாலொமோன், வாலிபத்தில் கர்த்தருடைய கட்டளையின்படி வாழ்க்கையை ஆரம்பித்தாலும், வயது சென்ற போது அவனுடைய இருதயம் வழுவிப் போயிற்று. காரணம் தேவன், இஸ்ரவேல் ஜனங்கள் புறஜாதி களிலிருந்து பெண் கொள்ளக் கூடாது என்று கட்டளையிட்டிருந்தார். ஆனால் சாலொமோன் அனேக புறஜாதி ஸ்திரிகளை மணந்தான். அவனுடைய

நம்மை தாக்குகிற நாட்கள். கைவிடப் படுகிற நாட்கள். நேசிப்பாரற்ற நாட்கள். அப்படிப்பட்ட நாட்கள் வருவதற்கு முன்பு ஆண்டவரைக் சொந்த இரட்சகராக கண்டு கொள்ளவேண்டும்.

## வயோதிபத்தின் அவலம் (பிரசங்கி. 12:2-7)

**சூரியனும், வெளிச்சமும், சந்திரனும், நட்சத்திரங்களும், அந்தகாரப்படாததற்கு முன்னும்:**

சூரியனும், சந்திரனும், நட்சத்திரங் களும் இயற்கையாக வெளிச்சம் வீசக் கூடியவைகள். அவைகள் வாலிபத்தின் செழிப்புள்ள, மகிழ்ச்சியான, கொழுத்த, அதிக ஞானமாய் சுடர் விடுகிற விளக்கை போல ஜீவிக்கிற நாட்களை குறிக்கிறது. பிரகாசமான நாட்களைக் குறிக்கிறது. நாட்கள் கடந்து செல்ல செல்ல, வயது ஆக ஆக, இவைகள் கொஞ்சம் கொஞ்சமாக அந்தகாரப்பட்டு

வருகிறது என்று வேதம் கூறுகிறது. ஆனால் வேதத்தை தியானிக் கிறவனுக்கு இளைப்பாறுதலைத் தேவன் கட்டளையிடுகிறார்.

## தேவனுக்கு பயப்பட வேண்டும். (பிரசங்கி.12:13,14)

தேவனுக்கு பயப்படுகிற ஜீவியம் வாலிபத்தின் நோக்கமாக காணைப்பட வேண்டும். தேவனுக்கு பயப்படுவது என்பது அவருடைய கட்டளைகளுக்கு கீழ்படிந்து அவருடைய கற்பனைகளை கைக்கொண்டு ஜீவிப்பதாகும். கர்த்தருக்கு பயப்படுவதே ஞானத்தின் ஆரம்பம். கடைசி நாட்கள் தேவ பயமற்ற சந்ததி உருவாகிக் கொண்டிருக்கிற நாட்கள். பிள்ளைகள், வாலிபர்கள் மத்தியில் தேவனுக்கு பயப்படுகிற பயம் இல்லை. தேவன் உண்டோ என்று கேட்கிற மதிகேடர்கள் பெருகிப்போன நாட்கள்.

